# பத்தாம்வகுப்பு – அரசுப்பொதுத்தேர்வு – மார்ச் 2019

## தமிழ் முதற்றாள் – (TENTATIVE ANSWER KEY) மதிப்பெண்கள் : 100

பிரிவு – I (மதிப்பெண்கள் : 20)

| பகுதி – 1 | | 6 x 1 = 6 |
|---|---|---|
| I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து, குறியீட்டுடன் எழுதுக. | | |
| 1 | (இ) மாணிக்கம் | 1 |
| 2 | (ஆ) கம்பராமாயணம் மற்றும் திருக்குறள் | 1 |
| 3 | (அ) எருமை | 1 |
| 4 | (அ) பெரியார் | 1 |
| 5 | (அ) தொடுத்தல் | 1 |
| 6 | (ஆ) இராமலிங்கர் | 1 |

| பகுதி – 2 | | 6 x 1 = 6 |
|---|---|---|
| II . கோடிட்ட இடத்தை நிரப்புக | | |
| 7 | திருவள்ளுவர் | 1 |
| 8 | நெற்கதிர் | 1 |
| 9 | துள்ளல் | 1 |
| 10 | அம்பேத்கர் | 1 |
| 11 | எடிசன் | 1 |
| 12 | உடற்கூறு | 1 |

| பகுதி – 3 | | 4 x 1 = 4 |
|---|---|---|
| III . பொருத்துக | | |
| 13 | சீத்தையர் – கீழானவர் | 1 |
| 14 | தெறு – பகை | 1 |
| 15 | தார் – மாலை | 1 |
| 16 | செத்தை – குப்பைக்கூளம் | 1 |

| பகுதி – 4 | | 4 x 1 = 4 |
|---|---|---|
| IV . விடைக்கேற்ற வினா அமைக்கவும் (ஏற்ற வினா அமைத்திருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | | |
| 17 | சங்க இலக்கியங்கள் எவற்றைக் கடந்தவை? | 1 |
| 18 | ஈஸ்ட்மன் என்பார் எச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டறிந்தார்? | 1 |
| 19 | காந்தியடிகள், பலகோடி மக்களின் எதைப் போக்கும் வாழ்வாதாரம், கதர் என்று கருதினார்? | 1 |
| 20 | தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் இருபது விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு எதை வெளியிட்டுள்ளது? | 1 |

பிரிவு – II (மதிப்பெண்கள் : 20)

| பகுதி – 1 | | |
|---|---|---|
| V. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் | | 5 x 2 = 10 |
| 21 | ❖ ஊக்கமுடையான் ஒடுக்கம், ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்குவதற்கு முன்னர் பின்வாங்கும் தன்மையைப் போன்றது. | 2 |
| 22 | ❖ பிறர்க்குப் பணிந்து நல்வழியில் நடத்தல்<br>❖ மாண்புடைய சான்றோர் அறிவுரைகளைப் பின்பற்றுதல்<br>❖ நுண்ணறிவு நூல்களை ஆராய்தல்<br>❖ அவை நவிலும்வண்ணம் வாழ்தல் | ½<br>½<br>½<br>½ |

| | | |
|---|---|---|
| 23 | ❖ வேட்டைநாய்களைக் கொண்டிருப்பவன்<br>❖ தோல் செருப்பணிந்த பெருங்கால்களை உடையவன்<br>❖ இருள் போன்ற கரிய நிறத்தையுடையவன்<br>❖ கரிய மேகக்கூட்டம் போன்ற மிகுதியான மனபலம் உடையவன் | ½<br>½<br>½<br>½ |
| 24 | ❖ (ஆதிநான் மறைநூல் கற்ற வாய்மை தவறாதவர்) – **அப்பூதியார்**<br>❖ **திருநாவுக்கரசரிடம்** (கூறினார்) | 1<br>1 |
| 25 | ❖ செய்யுளின் விதைகள் - வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம்<br>(அல்லது) – ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி<br>❖ விளைபொருள்கள் - அறம், பொருள், இன்பம், வீடுபேறு | 1<br><br>1 |
| 26 | ❖ அருள் | 2 |
| 27 | ❖ அறிவில்லாதவரான அரசர், நந்திவர்மனுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளை வணங்காதவராகித் தேவர் உலகத்தை ஆள்பவராவர் | 2 |

| பகுதி – 2 | | |
|---|---|---|
| **VI. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்** | | **5 x 2 = 10** |
| 28 | ❖ "இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைக் கூறுவது தொல்காப்பியம்" | 2 |
| 29 | ❖ விளக்கப்படம்<br>❖ உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்வை மட்டும் காட்டும் படம் | 1<br>1 |
| 30 | ❖ அரபுநாடு<br>❖ யவனநாடு<br>(அல்லது) கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து, சாவகம் | 1<br><br>1 |
| 31 | ❖ பதிற்றுப்பத்து<br>❖ கரும்பைப் பிழிவதற்கும் எந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன | 1<br>1 |
| 32 | ❖ இந்தியாவின்வாழ்வு என்பது இலட்சக்கணக்கானகிராமங்களின் வாழ்வுதான்<br>❖ அந்தக் கிராமங்களின் வாழ்வு, அந்த நாட்டின் உழவர்கள், இளைஞர்கள் ஆகியோர் கைகளில்தான் உள்ளது | 1<br>1 |
| 33 | ❖ வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார்<br>❖ அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார் | 1<br>1 |
| 34 | ❖ மருத்துவம்<br>❖ பொறியியல்<br>❖ வேளாண்மை<br>❖ சட்டம் | ½<br>½<br>½<br>½ |

**பிரிவு – III** **(மதிப்பெண்கள் : 24)**

| பகுதி – 1 | | |
|---|---|---|
| **VII. எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** | | **3 x 4 = 12** |
| 35 | ❖ கொற்றவையும் அல்லள்<br>❖ பிடாரியும் அல்லள்<br>❖ பத்திரகாளியும் அல்லள்<br>❖ காளியும் அல்லள்<br>❖ துர்க்கையும் அல்லள்<br>❖ மிகவும் கோபங்கொண்டவள் போல் விளங்குகிறாள்<br>❖ பொற்சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்தியவள்<br>❖ கணவனை இழந்த அவள் நம் வாயிலின் முன்னே நிற்கின்றாள் | 4 |

| | | |
|---|---|---|
| 36 | ❖ உள்ளத்து அன்பின்முதிர்வினால் - குகன் கொண்டுவந்த தேனும் மீனும் கிடைத்தற்கு அரியன<br>❖ அமுதத்தைவிடச் சிறந்தன<br>❖ எத்தகையனவாய் இருப்பினும், அன்புகலந்ததெனில் தூய்மையானவையே<br>❖ எம்போன்றோர்க்கும் உரியன | 4 |
| 37 | ❖ மண்ணில் கிடைக்கும் பொன்னும், கடலில் கிடைக்கும் பவளமும் முத்தும்,<br>❖ பெருமலையில் பிறக்கும் மாணிக்கமும் தோன்றும் இடங்களால் ஒன்றுக்கொன்று தொலைவில் உள்ளன.<br>❖ இவற்றை மாலையாகக் கோத்து அருமையான அணிகலன் அமைக்கும் போது,<br>❖ தம்முள் ஒருங்கே சேர்கின்றன. அதுபோல<br>❖ சான்றோர் என்றும் சான்றோர் பக்கமே இருப்பர்.<br>❖ சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே சேர்வர் | 4 |
| 38 | ❖ சிங்கக்கூட்டங்களைத் தவிர பிற விலங்குகளின் இறைச்சியை உண்ணும்.<br>❖ யானைகளின் கொம்புகளைப் பிடித்து இழுக்கும்<br>❖ அவற்றின் மார்பினைக் கீறி, குருதியினைக் குடித்து உறங்காமல் நிற்கும்<br>❖ இடியைக் காட்டிலும் அதிகமாக முழங்கும் | 4 |
| 39 | ❖ இன்று ஓய்வெடுத்து நாளை செல்லலாம் என்று எண்ணினால்<br>❖ ஓர் இரவுக்குள் வழித்தடத்தில் என்னென்ன நேருமோ<br>❖ பணியை முடித்து ஓய்வு பெறுக<br>❖ இனிக்கும் செய்திகள் உன் மனத்தில் வந்து குவியும்<br>❖ செடிகள் பூப்பதற்குமுன் ஓய்வெடுப்பதில்லை<br>❖ செடியின் வெற்றி பூவில் உள்ளதைப்போல்,<br>❖ உன் வெற்றிகளால் துன்பங்கள் யாவும் ஓடிவிடும். | 4 |

| பகுதி – 2 | | |
|---|---|---|
| VIII. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் | | 3 x 4 = 12 |
| 40 | ❖ பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும்<br>❖ ஆணுக்குப்பெண் இளைப்பில்லை<br>❖ தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல்<br>❖ சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ்பெற்ற பெண்மணிகளாக விளங்கவேண்டும் | 4 |
| 41 | ❖ அம்பேத்கர் 1946 ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.<br>❖ இவரது அரிய முயற்சியினால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. | 4 |
| 42 | ❖ தொடக்கம் நன்றாக இல்லாவிட்டால் கேட்பவர்களுக்கு பேச்சினைப் பற்றிய நல்லெண்ணம் தோன்றாது<br>❖ தங்குதடையின்றிப் பேச தொடக்கமே அடித்தளமாகும்<br>❖ கேட்போரை வயப்படுத்தும் முறையில் தொடங்கவேண்டும்<br>❖ சுருக்கமான முன்னுரையுடன் பேசுவது நல்லது<br>❖ பேசத் தொடங்கிய ஓரிரு மணித்துளிகளுக்குள் பேசப்போகும் பொருளில் புகுந்துவிடுதல் நன்று | 4 |

| | | |
|---|---|---|
| | | |
| 43 | ❖ பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர்.<br>❖ "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்கிறது குறள்.<br>❖ தமிழர் உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் உழவரைப் போற்றினர்.<br>❖ "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்னும் புகழ் மொழி இன்றும் போற்றப்படுகிறது.<br>❖ மருத நிலம் உழவுக்குச் சிறப்பு பெற்றது.<br>❖ மருதநிலத்தின்பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் | 4 |
| 44 | ❖ என்னைப் பொருத்தவரை தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்றே<br>❖ இராமனைப் போற்றக் காரணம், அவன் மனிதனாகப் பிறந்து மனிதப் பண்புகளால் உயர்ந்து, உலகம் உய்ய வழிகாட்டியதால்தான்<br>❖ மனிதர் மனிதத்தன்மையால் பிறருக்கு உணர்த்தப்பெறுவதே சிறப்பு<br>❖ உலகோர் அனைவரும் குறிக்கோளுடைய மனிதராக இருந்தால், உலகமே ஒரு நல்ல சமுதாயமாக உருவாகும் | 4 |

பிரிவு – IV (மதிப்பெண்கள் : 10)

| | | |
|---|---|---|
| IX. | கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக | 5 x 1 = 5 |
| 45 | (i) வினைத்தொகை<br>(ii) பதிதொறு, கதிர்தொகு, நிதிதரு, மதியிலி<br>(iii) நந்திக்கலம்பகம்<br>(iv) மதியிலி அரசர் / மலரடி பணிகிலர்<br>(v) மேகம் | 1<br>1<br>1<br>1<br>1 |
| 46 | கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க | 5 x 1 = 5 |
| | (i) முந்நீர் = மூன்று + நீர் ; ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர்.<br>(ii) பெண்<br>(iii) ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத்துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள்<br>(iv) வினை(தொழில்) செய்தலே /(பொருளீட்டலே) ஆண்களுக்கு உயிராகும்.<br>(v) ஆண்கள் | 1<br>1<br>1<br>1<br>1 |

பிரிவு – V (மதிப்பெண்கள் : 26)

| | | |
|---|---|---|
| | பகுதி – 1 | |
| X. | பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும் | 2 x 8 = 16 |
| 47 (அ) | ❖ ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் பத்துக்கருத்துகள் | 8 |
| | (அல்லது) | |
| 47 (ஆ) | ❖ வாழ்க்கையில் அனைவரும் பின்பற்றவேண்டிய நெறிமுறைகள் பற்றி நல்லந்துவனார் கூறும் அனைத்துக் கருத்துகள் | 8 |
| | | |
| 48 (அ) | <u>பெண்கள் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறுவன</u><br>1. பெண் கல்வி<br>❖பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று, சமூக மாற்றத்திற்கும் இன்றியமையாதது.<br>❖ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும். | 2 |

அன்னை சூடு

| | | |
|---|---|---|
| | ❖அவர்களுக்கு உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும் .<br>❖பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருப்பது கொடுமை. இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்.<br>2. பெண்ணுரிமை<br>❖ பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும்.<br>❖ பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமைகளாக இல்லாமல் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ்பெற்ற பெண்மணிகளாக விளங்க வேண்டும்.<br>3. சொத்துரிமை<br>❖ பெண்ணுரிமை மறுப்பிற்கான காரணங்களுள் ஒன்று சொத்துரிமை இல்லாமை.<br>❖ அவர்களுக்குச் சொத்துரிமை வழங்கிவிட்டால் எல்லாவிதமான அடிமைத்தனங்களும் மறைந்துபோகும்.<br>4. அரசுப்பணி<br>❖ ஆணுக்குப் பெண் இளைப்பில்லை.<br>❖ எனவே, அரசின் அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் பணியாற்ற வேண்டும். அப்போதுதன் நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றார் பெரியார். | 2<br><br>2<br><br>2 |
| | (அல்லது) | |
| 48 (ஆ) | ❖ அறவழி விடுதலைப்போர் குறித்த செய்திகள் | 8 |
| | பகுதி – 2 | ( மதிப்பெண்கள்: 1 0 ) |
| 49 | மனப்பாடப்பாடலை அடிபிறழாமல் எழுதுக. | 2+2+6 =10 |
| அ)<br><br>ஆ)<br><br>இ) | அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்<br>பேணித் தமராக் கொளல்<br><br>உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்<br>கல்லார் அறிவிலா தார்<br><br>உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்<br>ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்<br>சலசலெனஎவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்<br>தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்<br>இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்<br>எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்<br>தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை<br>தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.<br>- பாவேந்தர் பாரதிதாசன் | 2<br><br>2<br><br>6 |



என்றென்றும் மாணவர்நலனில் ……

முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, தமிழாசிரியர்,

ஏழாயிரம்பண்ணை – 626 201, விருதுநகர் மாவட்டம்.

வலைப்பூ: annaachi7k.blogspot.com